செய்தி வெளியீடு எண்:751 நாள்:20.09.2021

செய்தி வெளியீடு

**கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் ரூ.83.55 இலட்சம் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (20.9.2021) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 83 இலட்சத்து 55 ரூபாய் மதிப்பீட்டிலான ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம், நியாயவிலைக் கடை, விளையாட்டு திடல் மற்றும் பூங்கா ஆகியவற்றை திறந்து வைத்து, 167 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மேலும், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் Tally பயின்ற 157 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாதவரம் நெடுஞ்சாலை, செயின்ட் மேரிஸ் பள்ளிக்கு அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினார்.

பல்லவன் சாலையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 24 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கி, அவ்வளாகத்தில் மரக்கன்று நட்டு வைத்தார்.

சீனிவாசா நகர் 3-வது குறுக்குத் தெருவில் 28 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி சிறுவர் விளையாட்டுத் திடல் மற்றும் பூங்காவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, சிறுவர், சிறுமியர்களுடன் உரையாடினார்.

மேலும், பெரியார் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் Tally பயின்ற 157 மாணவ, மாணவியருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மடிக்கணினிகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை, தொகுதி மக்களுக்கு மருத்துவ உதவித் தொகை, திருமண உதவித்தொகை, மாவு அரவை இயந்திரங்கள், இஸ்திரி பெட்டிகள், தள்ளுவண்டிகள், மீன்பாடி வண்டிகள், என மொத்தம் 167 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.ஏ.சண்முகசுந்தரம், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி எம். அருணா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

•••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9